1994 ஜனவரி 5]

வேலைவாய்ப்புத் திட்டத்திலே புதிதாக சாலை அமைக்க நிதி ஒதுக்கம் செய்யப்படாத காரணத்தினாலே இந்தச் சாலையை எடுத்து செப்பனிட முடியவில்லை. பூதலூர் ஊராட்சி ஒன்றியத்திலே பொது நிதியிலே போதுமான நிதிவசதி இல்லாத காரணத்தாலே எடுத்துக்கொள்ளப்பட முடியவில்லை. மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை வருகின்ற நிதியாண்டில் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ப. கலியபெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் கிராமங்களுக்கு வேண்டிய அடிப்படை வசதிகளை செய்து தரவேண்டுமென்று 1979-ல் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் கொண்டு வந்த திட்டத்தை, இன்று கோடானுகோடி ஏழை மக்களின் இதயத்திலே அன்பு தெய்வமாக வீற்றிருக்கின்ற அன்னையின் ஆட்சியில் இந்த கடையக்குடியில் வாழ்கின்ற 1000 மக்கள்தொகை கொண்ட அளவில், அந்தப் புகைவண்டி நிலையத்திற்குச் செல்வதற்கு 1½ கிலோ மீட்டர் தூரத்திற்கு வயல் வரப்புகளிலும், கரடுமுரடான பாதைகளிலும் செல்ல வேண்டிய சூழ்நிலை இருக்கின்றது. நோய்வாய்ப்பட்டாலும் அவர்கள் சுற்றி வெகுதூரம் செல்லவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. ஆதலாலே வருகின்ற 1993-94 ஆம் ஆண்டிலாவது அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள், அதற்கான ஆணையிடுவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் நான் ஏற்கெனவே சொன்னேன். வருகின்ற நிதியாண்டிலே இந்த வேலை எடுத்துக்கொள்ளப்படும்.

முற்பகல் 11.00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்அனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

வினா எண் 176-திரு. சோ. பாலகிருஷ்ணன், இருக்கையில் இல்லை, டாக்டர் எஸ். சுந்தரராஜ், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

176--

முதுகுளத்தூர், கமுதி, கடலாடி ஒன்றியங்களுக்கு வைகையிலிருந்து தண்ணீர் வழங்கும் திட்டம்.

* 17471 **திரு. சோ. பாலகிருஷ்ணன்:**

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) முதுகுளத்தூர், கமுதி, கடலாடி ஒன்றியங்களுக்கு வைகையில் இருந்து தண்ணீர் கொடுக்க இராஜகம்பீரம் மற்றும் கொழுந்துரை திட்டங்கள் இன்னும் செயல்படுத்தப்படாமல் இருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், இது குறித்து அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக கூறினார்கள். முதுகுளத்தூர், கமுதி, கடலாடி ஆகிய ஒன்றியங்களுக்கு, ராஜகம்பீரம் மற்றும் கொழுந்துறை திட்டங்கள் எந்த ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது ? எத்தனை ஊர்களுக்கு இந்தக் கூட்டுக் குடிநீர் திட்டத்தினால் தண்ணீர் கிடைப்பதற்கு திட்டமிடப்பட்டது? கால தாமதத்திற்கு காரணம் என்ன? அமைச்சர் அவர்கள் நேரில் வந்து ஆய்வு செய்து அங்கே தண்ணீர் வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலாடி முதுகுளத்தூர் கூட்டு குடிநீர்த் திட்டத்திற்காக குடிநீர் வைகையாற்றிலிருந்து, ராஜகம்பீரம் என்ற இடத்தை தலைமையிடமாகக் கொண்டு நீர் உறிஞ்சி குழாய்கள் அமைக்கப்பெற்று அவற்றிலிருந்து 3 குதிரைத் திறன் கொண்ட 8 நீர்மூழ்கி விசைப்பம்புகள் மூலமாகவும், 90 குதிரைத் திறன் கொண்ட டர்பன் விசை பம்புகள் மூலமாக தண்ணீர் சேகரிக்கப்பட்டு அவைகள் 300 மில்லி மீட்டர் விட்டமுள்ள கல்நார் சிமெண்ட் குழாய்கள் மூலமாக 29,835 மீட்டரில் அமைந்துள்ள அச்சன்குளம் நீர் உந்து நிலையத்திற்கு உந்தப்பட்டு வருகிறது. தற்போது குடிநீரானது கோவிலான்குளம் நீர் சேகரிக்கும் தொட்டிக்கு சென்று அடைவதற்கு 15–7–1993 எனவும், முதுகுளத்தூர் நீர் சேகரிக்கும் தொட்டிக்கு சென்று அடைய 15–8–1993 எனவும் கால நிர்ணயம் செய்யப்பட்டு அனைத்து பணிகளும் முடுக்கி விடப்பட்டன. ஆனால் தற்சமயம் அச்சன்குளம் நீர் உந்து நிலையத்திலிருந்து கோவிலான் குளத்திற்கு குடிநீரானது 250 மில்லி மீட்டர் விட்டமுள்ள கல்நார் குழாய்களின் மூலம் உந்தப்பட்டு வரும்போது பசும்பொன் விளக்கு காலனி அருகேயும், பசும்பொன்விளக்கு கண்மாய் மடை பாலத்தின் அருகே குழாய் உடைக்கப்பட்டு நீர் தேக்கப்பட்டு உள்ளது. அதேபோல கோட்டைமேடு குண்டாத்தி வீரன் கோவில் அருகே உள்ள சிறு பாலத்தின் கீழ் உள்ள குழாய்கள் இப்படி

1994 ஜனவரி 5]

பல குழாய்கள் உடைக்கப்பட்டதன் காரணமாகவும் சில விஷமிகளுடைய அத்துமீறிய செயல்கள் காரணமாகவும் இந்த நிகழ்வுகள் ஏற்பட்டிருக்கின்றன. இது சம்பந்தமாக காவல் துறைக்கும் நடவடிக்கை எடுக்கச் சொல்லி புகார் கொடுக்கப்பட்டு இருக்கிறது. இவ்வடைப்புகளை சரி செய்யும் பொருட்டு நீர் உந்தும் பணியானது நிறுத்தப்பட்டிருக்கிறது. உடைப்புகள் சரி செய்யும் பணி நடைபெற்று வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அமைச்சர் அவர்கள் ஆய்வு செய்வார்களா என்று ஒரு கேள்வி கேட்டிருக்கிறார்கள். மாண்புமிகு வணிகவரித் துறை அமைச்சர் அவர்களும் மாண்புமிகு செய்தி துறை அமைச்சர் அவர்களும், நானும், கடந்த மாதம் அந்தப் பகுதிக்குச் சென்று வேண்டிய நடவடிக்கைகளை நேரிடையாகவே மேற்கொண்டிருக்கிறோம். ஆகவே அந்தப் பணிகளைப் பொறுத்தவரையில் கூடிய விரைவில் முடிக்கப்பட்டு குடிநீர் மக்களுக்கு வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 177, திரு. கே. செல்வராஜ், இருக்கையில் இல்லை. திரு. சிங்கை கோவிந்தராசு, மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

177–

அருள்மிகு கோணியம்மன் கோவிலின் வருமானம் பெருக வணிக மையம் கட்டுதல்

15164*–திரு கே. செல்வராஜ்:**

மாண்புமிகு இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–

(அ) கோயம்புத்தூர், அருள்மிகு கோணியம்மன் கோவிலுக்குச் சொந்தமான கடைகளை தனியாரிடமிருந்து கையகப்படுத்தி வருமானம் பெருக வணிக மையம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது கட்டப்படும் ?

மாண்புமிகு திரு வெ. நடேசன் பால்ராஜ் , இந்துசமய அறநிலையத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : கோவைநகரில் உள்ள அருள்மிகு கோணியம்மன் திருக்கோயிலுக்குப் பாத்தியப்பட்ட 10 கடைகளை தனியாரிடமிருந்து அப்புறப்படுத்தி ஒரு இராஜகோபுரம் கட்டுவதற்காக ஒரு திட்டம் இருந்து வருவதால் வணிக மையம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை.

திரு. சிங்கை கோவிந்தராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாநகரில் மிக பழம் பெரும் கோவிலான அருள்மிகு கோணியம்மன் கோவிலில், அதுவும் நகரின் மைய பகுதியிலே